கிறிஸ்துநாதர் ஆலய பாடகர் குழுவைப்பற்றி

## நான் அறிந்த சில விடயங்கள்

நான் 1926 ஆம் ஆண்டு மே மாதம் 9ம் திகதி கிறிஸ்துநாதர் ஆலய பாடகர் குழுவில் சேர்ந்து என் ஜீவியத்தில் முதன்முறையாக அங்கி அணிந்தேன். அந்தத் திகதியை என்னால் மறக்கவே முடியாது. நான் சேர்ந்த காலத்தில் ஒரு சிறுவன் பாடகர் குழுவில் சேர வேண்டுமானால் சுமார் நான்கு வாரங்கள் பயிற்சிகளுக்கு ஒழுங்காக வந்து ஆலயத்தின் முன் இருக்கையிலமர்ந்து ஆராதனைகளின் ஒழுங்கு முறைகளை அவதானிக்க வேண்டும். அந்த நான்கு வாரங்கள் கழிந்த பின்னர் கின்னரம் வாசிப்பவர் அனுமதித்தால்தான் அங்கிகள் கொடுக்கப்படும். பாடகர்களின் தலைவர் என்று யாரும் கிடையாது. ஆனால் என் விடயத்தில் அந்தச் சட்டம் விதிவிலக்காகி விட்டது. நான் மே மாதம் 8 ஆம் திகதி மட்டும் பயிற்சிக்குப் போனேன். அடுத்த நாள் ஆராதனைக்கு அங்கி அணிந்து விட்டேன். அப்போது சபைக்குருவாக இருந்த கனம் ஜே.வி தானியேல் போதகர் தூத்துக்குடியில் கனம் கால்ட்வெல் என்னும் ஆங்கில குருவானவரின் கீழ் பாடகராக இருந்தவராம். ஆகவே பயிற்சிகள் விடயத்தில் சற்று கண்டிப்பாக இருந்தார் அவருக்கு அனுசரணையாக திரு.மோசஸ் என்பவர் கின்னரம் வாசிப்பவராக இருந்தார். இவர் இச்சபையின் குருவானவரின் மேற்பார்வையிலுள்ள “சீ.எம்.எஸ்” ஆண்கள் பாடசாலையில் சில சமயம் உதவி செய்பவராகவும் மற்ற நேரங்களில் உபதேசிகராகவும் கடமையாற்றினார். சனிக்கிழமைகளில் காலை 8.30 மணியிலிருந்து சுமார் 11 மணிவரை பாடகர் குழுவிலுள்ள சிறுவர்களுக்கு ஸ்வர சாகித்தியப் பயிற்சி கொடுத்து இராகக்கியானம் இல்லாதவர்களையும் சில வாரங்களில் நன்றாகப் பாடச் செய்து விடுவார். எந்தப் புதிய இராகங்களையும் படித்துக் கொடுத்துவிட்டு ஒவ்வொருவரையும் தனித்தனியே பாடச்சொல்வார். மாலையில் 4 மணியிலிருந்து 6 மணிவரை அனுபவமுள்ள பாடகரோடு சேர்ந்து அடுத்த ஞாயிறில் பாட வேண்டிய பாட்டுக்களும் பண்டிகை அல்லது விசேஷ நாட்களுக்குரிய பாட்டுக்களும் பயிற்றப்பட்டன. திரு.மோசஸ் எவ்வளவு காலம் நம் சபயில் கின்னரம் வாசித்தார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் நான் இலங்கைக்கு வந்தபின் இரண்டொரு வருடத்தில் இந்தியாவுக்குப் போய்விட்டார். அவர் போன பின் சிறுவர்களோடு சனிக்கிழமை காலையில் நடைபெற்ற பயிற்சி நிறுத்தப்பட்டு விட்டது. அதன்பின் திரு.எஸ்.எஸ்.தானியேல் பொறுப்பேற்று சொற்ப காலம் கின்னரம் வாசித்தார். அதன் பின் சற்று அனுபவமுள்ள திரு.ஞானம் பிச்சைமுத்துவிடம் ஒப்படைத்துவிட்டு திரு.தானியேல் மேற்பார்வையாளராகக் கடமையாற்றினார். இக்காலகட்டத்தில் கனம் தானியேல் போதகர் ஓய்வு பெற்றபடியால் கனம் சத்தியநாதன் போதகர் தமிழ்ச் சபைக்கு நியமிக்கப்பட்டார். இவர் கின்னரம் வாசிப்பதிலும் தேர்ச்சி பெற்றிருந்தபடியால் தவிர்க்க முடியாத காரணத்தால் கின்னரக்காரர் ஆராதனைக்கு வரமுடியாவிட்டால் தானே பாட்டுக்களை மட்டும் வாசித்து ஆராதனையை நடத்தினார். சில காலம் சென்ற பின் திரு.சைமன் தங்கராஜ் சபையின் தமிழ்ப் பாடசாலைக்கு உதவி உபாத்தியராகவும் கின்னரம் வாசிப்பராகவும் நியமிக்கப்பட்டார். கனம் சத்தியநாதன் போதகர் காலத்தில் முதன்முதலாக தமிழ் பாடகர் குழுவில் பெண்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். எந்த நற்காரியங்களுக்கும் ஆரம்பத்தில் எதிர்ப்புகள் இருப்பது போல இவ்விடயத்திலும் முதலில் சிலர் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால் அது வெயிலைக் கண்ட பனி போல மாயமாய் மறைந்து விட்டது.

கனம் சத்தியநாதன் போதகர் வேறு சபைக்கு மாற்றப்பட்ட பின் கனம் யோர்க் நமது சபைக்கு நியமிக்கப்பட்டார். இவருடைய வீட்டில் ஒரு கின்னரம் இருந்தபடியால் நமது பாடகர் குழுவிலிருந்த வாலிபர் நமது ஆராதனைக்குப் பின் அங்கு சென்று பாமாலைகளுக்குரிய பாகங்களை (Parts) பயின்று வந்தனர். இச்சமயத்தில் திரு.சைமன் ஆங்கில ஆராதனைகளுக்கு பைப் ஆர்கன் (Pipe Organ) அதன் பின்பு ஹமன்ட் ஆர்கன் (Hammond Organ) வாசிப்பதற்கு ஆங்கில போதகர் கனம் ஹாப்பர் அவர்களால் அநேக சமயங்களில் கேட்கப்பட்டார். இப்படியாக எல்லாம் நன்றாக நடைபெற்றுக் கொண்டிருந்த போது திரு சைமன் தனது உபாத்தியார் வேலையை ராஜினாமா செய்ய வேண்டியதாயிற்று. உடனே அவரை கனம் ஹாப்பர் ஐயர் ஆங்கில சபைக்கு முழுநேர கின்னரம் வாசிப்பவராக நியமித்தார். இது பண்டிகை நாட்களில் திரு.சைமனுக்கு சற்று

கஷ்டமாக இருந்திருக்கும் என்று நான் அனுமானிக்கிறேன். ஏனென்றால் பண்டிகை நாட்களில் இரவு ஆராதனைகள் இருந்தபடியாலும் இவருடைய வசிப்பிடம் வெல்லம்பிட்டியவில் இருந்தபடியாலும் இரவு பஸ் போக்குவரத்து இல்லாத படியாலும் இங்கே பாடசாலையில் தூங்கி எழுந்து கின்னரம் வாசிக்க வேண்டியதாயிற்று. பகல் ஆராதனைகள் எல்லாவற்றையும் முடித்துவிட்டுத்தான் வீட்டிற்குப் போவார். இப்படியிருக்கையில் சகல பரிசுத்தவான்களின் ஆலயத்தின் பாடகர் தலைவனாகவும், ஓய்வுநாட் பாடசாலையின் காரியதரிசியாகவும் நான் நியமிக்கப்பட்டேன். ஆகையால் திரு நெல்சன் திரு.சைமனுக்கு உதவியாக நியமிக்கப்பட்டார். திரு.சைமன் பாடகரில் ஆர்வமுள்ள சிலருக்கு தனது வீட்டில் கின்னரம் வாசிக்கவும் கற்றுக் கொடுத்தார். ஆதில் ஒருவர் திரு.வி.ரி.ராஜசிங் இவருக்கு சில வேளைகளில் தமிழ் ஆராதனைகளில் ஹமன்ட் ஆர்கன் வாசிக்கப் பயிற்றுவித்தார்.

கனம் யோர்க் போதகர் காலமான பின் கனம் இ.டீ.சாமுவேல் ஐயர் சபைக்குருவாக நியமிக்கப்பட்டார். திருநெல்சன் இந்தியா சென்று விட்டார். அவருடைய பொறுப்பகளிற் சிலவற்றை திரு. வை. எஸ்.டேவிட் தலைமைதாங்கினார். இக்கால கட்டத்தில் நானும் எனது பழைய சபைக்கே திரும்பி வந்து பயிற்சியளிப்பதில் உதவி செய்தேன். கனம் ஈ.டீ.சாமுவேல் இலங்கையில் தற்காலவாசியாக இருந்தபடியால் விசா முடிவடைந்தவுடன் இந்தியா சென்றுவிட்டதால் கனம் பி.வி.கோயில்பிள்ளை சபைக்குருவாக நியமிக்கப்பட்டார். நமது சபையில் ஊழியம் செய்த குருமார் எந்தெந்த வருடம் நியமிக்கப்பட்டு எத்தனை வருடங்கள் ஊழியம் செய்தார்கள் என்பதை சபையின் நடபடிப் புத்தகத்தில் தான் பார்க்க வேண்டும். கனம் கோயில்பிள்ளை போதகர் காலத்தில் திரு.சைமன் காலமாகிவிட்டார் இவர் இச்சபைக்கு ஆற்றிய சேவை போல் வேறு யாரும் இவ்வளவு நீண்ட காலம் இரவும் பகலும் உழைத்திருக்கமாட்டார்கள் என்பது என் அபிப்பிராயம். சரியாக வாசிக்கத் தெரியாத பிள்ளைகளுக்கு ஒவ்வொரு பாட்டையும் திருப்பித் திருப்பி சொல்லிக் கொடுத்து மனப்பாடமாக்கியதை நான் பக்கத்திலிருந்தே பார்த்ததினால் அவர் எப்படிப்பட்ட முயற்சியுடையவர் என்பதை தீர்க்கமாகவும் சாட்சியாகவும் சொல்லுகிறேன். அவருடைய சேவையை நன்கு பதித்து ஓர் ஞாபகச் சின்னம் இவ்வாலயத்தில் இடம் பெறாமற் போனது ஒரு வருந்தத் தக்க காரியம்.

திரு.சைமன் காலமான போது தமிழ் ஆராதனைகளுக்கு கின்னரம் வாசிக்க திரு.வி.ரி.ராஜசிங் ஒப்புக் கொண்டார். பாடகரைப் பயிற்றுவிப்பதற்கு என் அற்ப முயற்சியை ஆண்டவர் எனக்கீந்த பெரிய நன்மைகளை மனதில் கொண்டு காணிக்கையாக அர்ப்பணித்தேன்.

சில மாதங்களுக்கு பின் திரு.ராஜசிங் தன் வேலையினிமித்தம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு போய்விட்டபடியால் கின்னரம் வாசிக்க தகுந்த ஆள் இல்லாமல் தத்தளித்தோம். சில ஆராதனைகளில் இச்சமயம் சபைக்குருவாக இருந்த கனம் கொர்நேலியு சாமுவேல் ஐயரின் மனைவி திருமதி ஜீன் சாமுவேல் அவர்களும் கைகொடுத்துதவினார். ஒரு மாலை ஆராதனைக்கு தற்செயலாகவோ அல்லது ஆண்டவரின் நடத்துதலாகவோ ஒரு நாளும் வராத திரு.சுந்தரத்தை சபையில் கின்னரம் வாசிப்பதற்கு கேட்கும்படி கனம் பாலசிங் போதகரை நான் தூண்டினேன். குருவானவர் கேட்டவுடனே திரு.சுந்தரம் யாதொரு மறுப்பும் தெரிவிக்காமல் ஒப்புக்கொண்டது ஆண்டவரின் சித்தமல்லாது வேறல்ல. ஆகவே கின்னரம் வாசிப்பதில் ஏற்பட்ட பிரச்சினை ஓய்ந்துவிட்டது. இப்படியாக எல்லாம் சுமுகமாக போய்க்கொண்டிருந்த சமயத்தில் 1986 ஆம் வருடக் கடைசியில் எனக்குச் சுகவீனம் ஏற்பட்டு ஆஸ்திரேலியாவில் என் ஆண்மக்களிடம் போய்ச் சேர சகல ஒழுங்குகளும் கைகூடி வந்தது. ஆகவே 1987 ஆம் வருடம் பெப்ரவரி 11 ஆம் திகதி புறப்பட எல்லா ஒழுங்குகளும் செய்தேன். அதற்கு முன் அருமைப் பாடகர் குழு எனக்கு ஒரு பிரியாவிடை ஏற்படுத்தி படங்களும் எடுத்தார்கள். நான் புறப்படுமுன் எங்கள் வீட்டிற்கு வந்து பாட்டுக்கள் பாடி ஜெபித்து ஆண்டவரின் ஆசீர்வாதத்துடன் அனுப்பினார்கள். அவர்களின் அன்பார்ந்த செய்கையை என்னால் என்றும் மறக்க முடியாது.

நான் புறப்படுவதற்கு முந்தின நாள் ஆண்டவர் என் மனதை ஏவினபடியே என்னிடத்திலிருந்த சகல புத்தகங்களையும் இராகங்களையும் திரு.வெஸ்லி ராஜமணியிடம் கையளித்து பாடகர் குழுவைப் பற்றிய சகல பொறுப்புக்களையும் ஒப்படைத்து விட்டு வந்தேன். இது நம் அருள்நாதனின் திருவுளச் சித்தமேயன்றி வேறில்லை என்பதை நான் நிச்சயமாக நம்புகிறேன்.

இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்த மோசேக்குப் பின் யோசுவாவையும் சவுலுக்குப் பின் தாவீதையும் நியமித்திருந்த தேவன் கிறிஸ்து நாதர் ஆலய தமிழ் பாடகர் விடயத்திலும் சாம் ஆசீர்வாதத்துக்குப் பின் வெஸ்லி ராஜமணிதான் என தீர்மானித்திருந்தார் போலும். ஏனென்றால் நான் போனபின் இந்நாள் பரியந்தம் இப்பாடகர் வரிசை நாளுக்கு நாள் மேலோங்கி வளர்ந்திருப்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல் காணகூடியதாயிருக்கிறது. நான் தூர தேசத்திலிருந்தாலும் இப் பாடகர் குழுவின் முன்னேற்றத்தைப் பற்றி ஆழ்ந்து கவனித்து வருகிறேன். கிறிஸ்மஸ் கரோல் பாட்டுப் புத்தகங்களைப் பார்த்தால் எவ்வளவோ முன்னேற்றம். எனக்கு வரும் கடிதங்களில் பாடகரைப் புகழாதவர் கிடையாது. இதற்காக என் தேவனை தினமும் துதிக்கிறேன்.

சாம்.எஸ்.ஆசீர்வாதம்